**பதுள்ளை மாவட்டத்தின் 31 கமநல சேவை செயற்குழுகம் - 2022**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** பதுள்ளை மாவட்டத்தின் 31 கமநல சேவை செயற்குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்புக்களுடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2000 இன் 46 கொண்ட கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** பதுள்ளை மாவட்டத்தின் 31 கமநல சேவை செயற்குழுக்களில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துவதற்கு காரணமாகியிருந்த பொருன்மையான தவறுகள் கீழ் காண்பிக்கப்படகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்.**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்ககீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமைகள்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | 25 செயற்குழுக்களினால் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 42 பந்தி பிரகாரம் நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | கமநல வங்கி, கமநல சேவை செயற்குழுவின் அலகொன்றான போதும் பதுள்ளை மாவட்டத்தின் 31 கமநல சேவை செயற்குழுக்களினதும் இணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் ஆலோசனையை பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | இணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 13 செயற்குழுகளிற்கு சொந்தமான 18 கட்டிடங்களினதும், 10 காணிகளினதும், ஏனைய 04 சொத்துக்களினதும் பெறுமதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சொத்துக்களை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுபதென. | செயற்குழுவிற்கு சொந்தமான சொத்துக்களின் பெறுமதிகளை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 23 செயற்குழுக்களில் 4 ஆண்டுகள் முதல் 34 ஆண்டுகள் வரையான கால வீச்சளவாக அறவிட வேண்டிய மீதியாக முன்கொண்டு வரப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 29,580,002 ஆன 331 கணக்கு மீதிகளை அறவிட அல்லது பொருத்தமானவாறு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக கடன்படுனர்களான காட்டியுள்ளதால் நிதி நிலைமை கூற்றுக்களில் அப் பெறுமதிக்கு போலியான சொத்துக்கள் காட்டப்பட்டிருந்தன. | பரீட்சித்துப் பார்த்து குறித்த தரப்பினரிடமிருந்து அறிவிட அல்லது அவ்வாறு இல்லையெனில் அங்கீகாரத்தை பெற்று பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதென. | அறவிட வேண்டியதாக உறுதி செய்து கொள்ள முடியாத மீதிகள் தொடர்பில் முறையான அங்கீகாரத்தின் கீழ் பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவிட முடியுமான மீதிகளை இனங்கண்டு அறவிட வேண்டும். |
| (இ) | 21 செயற்குழுக்களில் 2 ஆண்டுகள் முதல் 40 ஆண்டுகள் வரையான கால வீச்சளவாக செலுத்த வேண்டிய மீதியாக முன்கொண்டு வரப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 29,803,433 ஆன 308 கணக்கு மீதிகளை உரிய அங்கீகாரத்தை பெற்று பொருத்தமானவாறு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக கடன்கொடுனர்களாக காட்டியுள்ளதால் நிதி நிலைமை கூற்றுக்களில் அப் பெறுமதிக்கு போலியான பொறுப்புக்கள் காட்டப்பட்டிருந்தன | பரீட்சித்துப் பார்த்து குறித்த தரப்பினரை இனங்கண்டு கொடுப்பனவு செய்ய அல்லது அவ்வாறு இல்லையெனில் அங்கீகாரத்தை பெற்று மீதிகளை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதென. | செலுத்த வேண்டியதாக உறுதி செய்து கொள்ள முடியாத மீதிகள் தொடர்பில் முறையான அங்கீகாரத்தின் கீழ் பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செலுத்த வேண்டிய மீதிகளை இனங்கண்டு விரைவில் செலுத்த வேண்டும். |
| (ஈ) | 02 செயற்குழுக்களில் பெறுமதி ரூபா 499,361 ஆன பௌதீக ரீதியான காணப்படாத 02 டெக்டர் வண்டிகள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் தீர்ப்பதென. | பொருத்தமானவாறு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | றபுக்பொத கமநல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,118,781 பெறுமதியான அலுவலக உபகரணங்களிற்காக மற்றும் ரூபா 2,731,028 ஆன கட்டிட மேம்படுத்தற்களிற்காக மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 248,429 | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | ஆண்டிற்குரிய நிலையான சொத்துத்து பெறுமானத் தேய்வு பெறுமதியை நிதி செயலாற்றல் கூற்றில் செலவின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், லுனுகல கமநல சேவை செயற்குழுவினால் நிலையான சொத்து பெறுமானத் தேய்வு ரூபா 322,185 வை நிதி செயலாற்றல் கூற்றில் செலவுகளின் கீழ் காண்பிக்கப்படாததால் ஆண்டின் மிகை ரூபா 570,614 இனால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | ஊவபறனகம கமநல சேவை செயற்குழுவினால் முன்வைத்த பரீட்சை மீதியின் வரவு மீதிகளின் சரியான கூட்டுத் தொகை ரூபா 4,478,064 மற்றும் செலவு மீதிகளின் சரியான கூட்டுத் தொகை ரூபா 4,428,360 ஆன போதும் அப் பெறுமானத்தை ரூபா 4,424,461 ஆகக் காட்டி பரீட்சை மீதியை தவறுகளுடன் சமப்படுத்தியிருந்ததுடன், பம்பறபான கமநல சேவை செயற்குழுவின் பரீட்சை மீதியின் வரவு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4,470,551 மற்றும் செலவு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4,470,058 ஆன போதும் அப் பெறுமானங்கள் முறையே ரூபா 4,470,561 மற்றும் 4,470,511 ஆகக் காட்டி தவறுகளுடன் சமப்படுத்தியிருந்த்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | பரீட்சை மீதிகளின் சரியான மீதிகளை உள்ளடக்கி சமப்படுத்த வேண்டும். |
| (எ) | 04 செயற்குழுக்களினால் மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்திருந்த கூட்டுத் தொகை ரூபா 345,807 பெறுமதியான நிலையான சொத்துக்களை, நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யாது மீண்டுவரும் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்வதென. | சரியான வகைப்படுத்தல்களுடன் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |
| (ஏ) | ஊவபறனகம செயற்குழுவின் நிதி நிலைமை கூற்றில் மொத்த சொத்துக்கள் மீதி ரூபா 6,405,789 ஆக வேண்டிய போதும் அது ரூபா 3,213,790 ஆக தவறுகளுடன் கூட்டப்பட்டிருந்ததால் நிதி நிலைமை கூற்றில் ரூபா 3,191,999 இனால் சமப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்வதென. | சரியாக நிதிக்கூற்றுக்களை சமப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 கமநல சேவை செயற்குழுக்களிற்குரியதாக 15 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி, நேரொத்த அறிக்கை பிரகார பெறுமதிகளுடன் இணக்கம் செய்கையில் ரூபா 6,610,793 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | இணக்கம் செய்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.4 தொங்கள் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 கமநல சேவை செயற்குழுக்களில் 10 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கு வரவு மீதியான ரூபா 910,382 மற்றும் 04 கமநல சேவை செயற்குழுக்களில் 10 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கு செலவு மீதியான ரூபா 1,241,623 இனை தீர்த்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதென. | தொங்கல் கணக்குகள் ஏற்படுவதற்கான காரணத்தை இனங்கண்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கு எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 22 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக கூட்டுத் தொகை ரூபா 38,900,852 ஆன 173 சொத்து மீதிகள் மற்றும் 16 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக கூட்டுத் தொகை ரூபா 108,373,673 ஆன 101 பொறுப்புக்கள் அட்டவணை, நிலையான சொத்துப் பதிவேடு, கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் பதிவேடுகள் மற்றும் மீதி உறுதிப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதென. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் அனைத்து மீதிகளையும் உறுதி செய்து கொள்வதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | | |
| | 55 (1) பிரிவு | | தமது அதிகார பிரதேசத்திற்குட்பட் விவசாய காணிகளை அளவையிட திட்டமிட வேண்டிய போதும் 22 செயற்குழுக்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது காணிகளை அளவையிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென. | கமநல அபிவிருத்தி சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 பிரிவு மற்றும் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 பிரிவுகள் | | 21 செயற்குழுக்களில் உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் ஆலோசனையை பெற்று முன்நடவடிக்கை எடுப்பதென. | சட்ட ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396 (ஈ) | 494,179 | 08 செயற்குழுக்களினால் விநியோகிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்த கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்காத 23 காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 774,353 | பதுள்ளை கமநல சேவை மாவட்ட அலுவலகத்திற்கு உரியதாக வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளை கடந்த 09 மீதிகள் தொடர்பில் தொடர்புடைய நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கட்டுநிதியை பெற்று எதிர்காலத்தில் தீர்ப்பதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2020 ஜுன் 25 திகதிய இலக்கம் 8/2020 கொண்ட சுற்றறிக்கை | | 18 செயற்குழுக்களில் பண்டங்கள், நிதிப் பொறுப்புடன் செயற்படும் 199 அலுவலர்களினால் பிணை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரியவாறு நடவடிக்கை எடுப்பதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | | | | |
| (i) | 1986 ஒக்டோபர் 21 திகதிய இலக்கம் 264 கொண்ட சுற்றறிக்கையின் 1 பந்தி | 2,983,513 | மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளிற்கு உரியதாக கிடைக்க வேண்டிய அறை வாடகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | குறித்த நிறுவனத்தை அறிவூட்டி வாடகை அறவிடுவதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு அறை வாடகையை அறவிட வேண்டும். |
| (ii) | 2012 பெப்ரவரி 29 திகதிய இலக்கம் 04/2012 கொண்ட சுற்றறிக்கையின் 3.4.9 பிரிவு | | ஒவ்வொரு மாதத்திலும் கடன் வழங்கப்பட்ட விவசாயிகளின் பெயர் பட்டியலொன்றை தலைமை அலுவலகத்திற்கு பிரதி ஒன்றுடன் மாவட்ட பிரதி /உதவி ஆணையாளரிற்கு அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டியதுடன், அதன் பிரதியொன்றை கமநல சேவை | எதிர்காலத்தில் உரியவாறு நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையத்தில் காட்சிப்படுத்த வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | | |
| (iii) | 2014 ஆகஸ்ட் 22 திகதிய இலக்கம் 07/2014 (இலக்கம் 107 திருத்திய) கொண்ட சுற்றறிக்கை | தினந்தோறும் கையிறுப்பில் வைத்திருக்க முடியுமான பணம் ரூபா 10,000 ஆன போதும் 11 செயற்குழுக்களினால் அந்த எல்லையை விஞ்சி 486 சந்தர்ப்பங்களில் பணம் கையிறுப்பில் வைத்திருக்கப்பட்டிருந்தன . | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 1981 ஒக்டோபர் 16 திகதிய இலக்கம் 107 கொண்ட சுற்றறிக்கை | ஏதேனும் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் அடுத்த ஆண்டு மார்ச் 31 திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 15 செயற்குழுக்களினால் 01 மாதம் மற்றும் 03 மாதம் வரையிலான தாமதத்துடன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய கால எல்லையில் நிதிக்கூற்றுக் களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பதுள்ளை மாவட்டத்தின் 31 கமநல சேவை செயற்குழுக்களிற்காக மீளாய்வாண்டில் ஒட்டு மொத்த செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,624,036 ஆன மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,342,794 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,718,758 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு விற்பனை வருமானம் குறைவடைந்தமை, நீர் மற்றும் மின்சார செலவுகள் மற்றும் உபகரண பழுதுபார்தல் செலவுகள் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு கமநல சேவை செயற்குழுவில் திண்ம சேதனப் பசளை 1,330 கிலோ கிராமும், 07 கமநல சேவை செயற்குழுக்களில் தேசன திரவப் பசளை 5,531 லீற்றர்களும் 01 கமநல சேவை செயற்குழுவில் உயிரியல் திரவப் பசளை 959.5 லீற்றர்களும் 03 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 454,579 பெறுமதியான விவசாய | பசளைகள் தொடர்பில் பசளை குழுவின் தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென மற்றும் ஏனைய இருப்புக்கள் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | பராதீனம் செய்ய அல்லது பொருத்தமானவாறு அகற்ற நடவக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விதைகள், விவசாய இரசாயண மற்றும் வேறு பசளைகளும் காலாவதியாகி இருந்ததுடன் அது தொடர்பில் பொருத்தமான செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 15 செயற்குழுக்களினால் அந்த செயற் குழுக்களிற்கு உரிய காணிகளின் அளவுகளை இனங்கண்டு அவற்றின் சட்டரீதியான உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த பிரதேச செயலகங்களிடமிருந்து கோரியுள்ளதென. | கமநல வேலை செயற்குழுக்களிற்கு உரிய காணிகளின் சட்டரீதியான உரிமையை செயற்குழுவின் பெயரில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 சிறு மற்றும் 2022/23 பெரும் போகத்தில் நெற் பயிர்ச் செய்கைக்காக சூழல் நேய பசளை வறியோக நிகழ்ச்சித் திட்டம்<br><br>பதுள்ளை மாவட்டத்தில் 31 கமநல சேவை செயற்குழுக்களிற்கிடையில் தெரிவு செய்யப்பட்ட 09 கமநல சேவை செயற்குழுக்களின் கீழ் பசளை விநியோகித்தல் தொடர்பாக பரீட்சிக்கும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | விவசாய திணைக்களத்தின் செயலாளரின் 2022/23 பெரும் போகத்திற்காக பசளை விநியோகிப்பது தொடர்பான வழிகாட்டியின் 5.5.1.4 பிரிவின் பிரகாரம் சூழல் நேய பசளை மாதிரிகளின் பகுப்பாய்வு அறிக்கை ஏழு கடமை நாட்களினுள் விஞ்ஞான கூடங்களிலிருந்து பெற்றுக் கொள்ளவும், உற்பத்தியாளரிடமிருந்து மாதிரியை பெற்று ஆறு கடமை நாட்களினுள் தகைமை சான்றிதழை உற்பத்தியாளரிற்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 09 செயற்குழுக்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் அதவானிக்கப்பட்டன. | தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து தகவல்களை பெற்று எதிர்காலத்தில் பதில் வழங்குவதென. | குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ii) | விவசாய திணைக்களத்தின் செயலாளரின் 2022/23 பெரும் போகத்திற்காக பசளை விநியோகிப்பது தொடர்பான வழிகாட்டியின் 5.5.4.3.2 பிரிவின் பிரகாரம் சூழல் நேய பசளைக்கான மாவட்ட செயற்பாட்டுக் | தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து தகவல்களை பெற்று எதிர்காலத்தில் பதில் வழங்குவதென. | குறித்த வழிகாட்டியின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |

| | | |
|---|---|---|
| குழுவினால் பசளைகளின் தரத்தை உறுதி செய்து கொள்வதற்காக அவ்வப் போது விநியோகிக்கப்படும் பசளைகளின் மாதிரிகளை தேசிய பசளை செயலகத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் கணக்காய்வு பரிசோதனைக்குட்படுத்திய 09 செயற்குழுக்களினால சூழல் நேய பசளை கிடைத்த பின்னர் எவ்வித தரப் பரிசோதனைக்கும் உட்படுத்தி இருக்கவில்லை. | | |
| (iii) விவசாய திணைக்களத்தின் செயலாளரின் 2022/23 பெரும் போகத்திற்காக பசளை விநியோகிப்பது தொடர்பான வழிகாட்டியின் 5.5.4.3.6 பிரிவின் பிரகாரம் மாவட்ட செயற்பாட்டுக் குழுவினால் விவசாய திணைக்களத்துடன் தொடர்புபட்டு வயல் வெளி மட்டத்தில் மண் போசனை பரிசோதனையை மேற்கொள்ள நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் அதன் விளைவுகளை வெளியிடல், அதன் பிரகாரம் பசளை பயன்பாடு தொடர்பான அறிவுறுத்தல்களை விவசாயிகளிற்கு வழங்க வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் 09 செயற்குழுக்கள் தொடர்பில் அவ்வாறு செய்திருக்கவில்லை. | தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து தகவல்களை பெற்று எதிர்காலத்தில் பதில் வழங்குவதென. | குறித்த வழிகாட்டியின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (iv) விவசாய திணைக்களத்தின் செயலாளரின் 2022/23 பெரும் போகத்திற்காக பசளை விநியோகிப்பது தொடர்பான வழிகாட்டியின் 7.5.4 பிரிவின் பிரகாரம் திணைக்ளத்தினால் அனைத்து உள்நாட்டு உற்பத்தியாளர்களினதும் பசளைகளை பதலகொட, பரந்தன் மற்றும் போம்புவல கள பரிசோதனைக்காக அனுப்பி அப் பசளைகளின் ஆக்கபூர்வ தன்மை மற்றும் வினைத்திறன் தொடர்பாக பரிந்துரை வழங்க வேண்டிய போதும் 09 செயற்குழுக்கள் தொடர்பில் அவ்வாறு பரிந்துரை வழங்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து தகவல்களை பெற்று எதிர்காலத்தில் பதில் வழங்குவதென. | குறித்த வழிகாட்டியின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஈ) 2022 சிறு போகத்தில் நெற் பயிர்ச் செய்கைக்காக யூரியா பசளை வநியோக நிகழ்ச்சித் திட்டம் | | |
| பதுள்ளை மாவட்டத்தின் 31 கமநல சேவை செயற் குழுக்களிற்கிடையில் | | |

தெரிவு செய்யப்பட்ட 07 கமநல சேவை செயற்குழுக்களின் கீழ் பசளை விநியோக செயன்முறையை பரீட்சிக்கும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | பிரிவுப் பொறுப்பு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலரினால் தமது பிரிவில் 2022 சிறு போகத்தில் நெல் பயிரிட்ட விவசாயிகளை கள பரிசோதனை மூலம் இனங்கண்டு அவர்கள் பயிரிட்ட காணி அளவுகள், பயிர்களின் வயது மற்றும் பசளை தேவைப்பாட்டை எழுத்து மூலம் கமநல சேவை நிலையத்திற்கு வழங்க வேண்டிய போதும் 07 செயற்குழுக்கள் அவ்வாறு கள பரிசோதனை இன்றி 2022 சிறு போகத்தில் சேதனப் பசளை விநியோகிக்கப்பட்ட விவசாயிகளின் பட்டியலை அல்லது வயல் காணி பெயர் பட்டியலில் குறிப்பிடப்படும் விவசாயிகளின் விபரங்களை கமநல சேவை நிலையத்தின் Google sheet பத்திரத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | சிறு போகத்திற்கான இலக்குகளை சரியாக நிலையங்களினால் வழங்கியுள்ளதுடன் Google sheet தரவுத் தொகுதி மூலம் பசளை விநியோகத்தை குறித்ததாக மற்றும் களப் பரிசோதனை மேற்கொள்ளவில்லை என. | கள பரிசோதனை மூலம் நெல் பயிருடும் விவசாயிகளை சரியாக இனங்கண்டு மாவட்டத்தின் பசளை தேவைப்பாட்டை சரியாக தீர்மானிக்க வேண்டும். |
| (ii) | விவசாய அமைச்சின் செயலாளரின் 2022 ஜுலை 07 திகதிய இலக்கம் SMFI/03/D/01/06/2022 கொண்ட சுற்றறக்கையின் 01 பந்தியின் 2022 ஜுலை 14 திகதிய திருத்தத்தின் பிரகாரம் உளர் மற்றும் இடைநிலை வலயங்களிற்குரிய பதுள்ளை மாவட்டத்தின் கமநல சேவை நிலையங்களில் நெல் பயிரிட்டுள்ள வயல் காணிகளிற்காக பயிர்களின் வயது 50 நாட்களை கடக்காத காணிகள் 02 ஹெக்டேயார் உச்சத்திற்கு யூரியா பசளை 100 கி.கி ஆகவும் 50 நாட்களை கடந்த பயிர்களின் காணி 02 ஹெக்டேயார் உச்சத்திற்கு யூரியா பசளை 50 கி.கி ஆகவும் விநியோகிக்க பரிந்துரைத்திருந்த போதும் மாதிரி கணக்காய்வு பரிசோதனைக்கு உட்பட்ட 03 கமநல சேவை செயற்குழுக்களில் 50 நாட்களை கடந்த நெற் காணி 5,558.7 ஹெக்டேயார்களிற்காக 50 நாட்களை கடக்காத வயல்களாக கருதி பசளை 277,845 கி.கி கூடுதலாக விநியோகிக்கப்பட்டிருந்தது. | விவசாய அமைச்சின் செயலாளரின் 2022 ஜுலை 07 திகதிய இலக்கம் 02/2022 கொண்ட சுற்றறக்கை பிரகாரம் பயிர்களின் வயது 60 நாட்களை விடவும் குறைந்த விவசாயிகளிடம் இருந்து பணம் சேகரித்ததாகவும் திருத்திய சுற்றறிக்கை கிடைக்கும் போது அனைத்து பணமும் சேகரிக்கப்பட்டு செயற்குழு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததாகவும் 2022 ஜுன் 07 திகதி பசளை விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட போது பயிர்களின் வயது 50 நாட்களிலும் குறைவெனவும் நிலையத்திற்கு பசளை கிடைக்க தாமதித்ததால் விவசாயிகளிற்கு பசளை கிடைக்கும் திகதியளவில் பயிர்களின் வயது 50 நாட்களை கடந்திருந்ததென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பிரதேச கமநல அபிவிருத்தி அலுவலரினால் பசளை தேவைப்பாட்டிற்கு உரிய பணத்தை விவசாயிகளிடமிருந்து அறவிட்டு அதன் பிரகாரம் கட்டளைகளை தயாரிக்காததால் நிலையங்களிற்கு கிடைத்த மொத்த தொகையையும் விவசாயிகள் கொள்வனவு செய்திருக்கவில்லை. பௌதீக பரிசோதனையின் போது மற்றும் ஆவண பரிசோதனையின் போது 03 கமநல சேவை செயற்குழுக்களிள்கு உரியதாக பசளை 48,635 கி.கி எஞ்சிய இருப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொறு அதிகார பிரதேசத்தின் உள்ளவாறான பசளை தேவைப்பாட்டை கட்டளை இட்டுள்ளதாகவும் ரூபா 10,000 ஆன விலைக்கு பசளையை பெற்றுக் கொள்ள விவசாயிகளிற்கு இயலுமை இல்லாததால் அதிகார பிரதேசத்தின் மொத்த பசளை தேவைப்பாட்டையும் கட்டளை இடாவிட்டால் அதன் பின்னர் பசளை பற்றாக்குறைக்கு முகம் கொடுக்கும் ஆபத்து ஏற்படக் கூடும் ஆகையால் மொத்த பசளை தேவைப்பாட்டையும் கட்டளை இட்டதனால் இவ்வாறு பசளை எஞ்சியதென. | பசளை கட்டளை இடல் மற்றும் விநியோகித்தல் முறையான திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) (i) | பதுள்ளை கமநல சேவை மாவட்ட அலுவலகத்தினால் கமநல சேவை நிலைய இரண்டு முகாமைத்துவ உதவி அலுவலர்களிற்கு முறையே 2018 நவம்பர் 18 திகதி மற்றும் 2023 ஏப்ரல் 21 திகதி விநியோகித்த குற்றப் பத்திரிகை தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தி இருக்கவில்லை. | ஒரு அலுவலர் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டுள்ளதுடன் மற்றைய அலுவலரினால் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென. | முறையான ஒழுக்காற்று விசாரணையை விரைவில் நடாத்தி அந் நடவடிக்கையை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ii) | பதுள்ளை கமநல சேவை மாவட்ட அலுவலகத்தினால் இரண்டு கமநல அபிவிருத்தி அலுவலர், குழு எழுதுனர் மற்றும் நிலைய முகாமைத்துவ உதவி பெண் அலுவலரொருவர் தொடர்பாக ஒழுக்காற்று கட்டளை விநியோகித்து 03 ஆண்டுகளிற்கும் 06 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் கடந்திருந்த போதும் அந்த கட்டளைகளை செயற்படுத்தி இருக்கவில்லை. | ஒரு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமை அலுவலகத்திடம் அறிவுறுத்தல் கோரியுள்ளதுடன் மற்றைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினால் அரச சேவைகள் ஆணைக்கழுவிற்கு மேன் முறையீடு சமர்ப்பித்துள்ளதாக, குழு எழுதுனரிடமிருந்து அறிவிட வேண்டிய தொகையை ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து மற்றும் ஓய்வூதியத்தில் | ஒழுக்காற்று கட்டளையை தாமதமின்றி செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இருந்து அறவிடுவதாக மற்றும் நிலைய எழுதுனர் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு மேன் முறையீடொன்றை சமர்ப்பித்துள்ளதென. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) 14 செயற்குழுக்களில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர்கள் 74 பேர்களுக்கு விற்பளை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் விநியோகித்திருந்த பொருட்கள்/உபகரணங்களிற்காக அறவிட வேண்டிய ரூபா 3,521,873 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறித்த தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | குறித்த தொகையை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) ஒரு செயற்குழுவினால் பெறுமதி ரூபா 4,196,740 ஆன ஒப்பந்த தொகைக்கு 2021 ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பசளை களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்காக கணக்காய்வு திகதி 2023 மார்ச் 21 திகதியளவில் ரூபா 701,823 தொகை செலுத்தி இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | ஏற்பாடு கிடைக்காததால் வேலைகளை பூர்த்தி செய்ய முடியாது போனதென. | ஒப்பந்த பிரகாரம் கட்டிடத்தை நிர்மாணிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 07 செயற் குழுக்களிற்கு சொந்தமான 13 நிலையான சொத்துக்கள் 03 ஆண்டுகளிற்கும் 15 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பயன்பாட்டிற்கு எடுக்காது விளைவற்று நிலவின. | எதிர்காலத்தில் பயன்படுத்த நடவடிக்கை எப்பதென. | சொத்துக்களை வரவேற்கத்தக்க விதத்தில் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கமநல சேவை மாவட்ட அலுவலகம் மற்றும் கமநல சேவை செயற் குழுக்களிற்கு உரிய 10 பதவிகளில் 223 | பற்றாக்குறையான ஊழியர்கள் தொடர்பில் தலைமை அலுவலகத்தை அறிவூட்டியுள்ளதென. | வெற்றிடங்களிற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஊழியர்களின் பற்றாக்குறை நிலவின.

**4. கமநல வங்கிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2002 ஆண்டு முதல் 27 செயற் குழுக்களினால் 4,556 விவசாயிகளிற்கு வழங்கியிருந்த விவசாய கடன் ரூபா 77,290,093 தொகை, 24 செயற் குழுக்களினால் 739 விவசாயிகளிற்கு வழங்கிய கருத்திட்ட கடன் தொகை ரூபா 24,845,117 தொகை, 17 செயற் குழுக்களினால் 413 விவசாயிகளிற்கு வழங்கிய உற்பத்திக் கடன் தொகையில் இலிருந்து ரூபா 11,770,338 தொகை மற்றும் 11 செயற் குழுக்களினால் 110 விவசாயிகளிற்கு வழங்கிய விவசாய உபகரணங்கள் மற்றும் ஏனைய கடன் தொகையிலிருந்து ரூபா 2,332,642 தொகையாக கூட்டுத் தொகை ரூபா 116,238,190 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல், கமநல நியாய சபைக்கு அனுப்புதல், அலுவல விசாரணை நடாத்துதல் மற்றும் அறிவூட்டல் கடிதம் அனுப்புதல் மூலம் அறவிட நடவடிக்கை எடுபதென. | குறித்த உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |